விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 8 ஜ. ஆகிர் 6 இதழ் 40

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22—3—83

## "தமிழ் மக்களின் பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்க்க முடியாது"

### பாராளுமன்றத்தில் 'யோகேஸ்'

[கொழும்பு]

"தமிழ் மக்களின் பிரச்னை அரசியல் பிரச்னை. அரசியல் பிரச்னையை அரசியல் நீதியிலேயே தீர்க்க வேண்டும். இராணுவ ரீதியில் அதனைத் தீர்க்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்க்க முயன்றால் அது பிரச்னையை மேலும் வளர்க்கும் முயற்சியாகவே முடியும்'

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நேற்றுப் பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் செலவீனம் தொடர்பான குழுநிலைவிவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இராணுவத் தளங்களை அரசு தற்போது கிழக்கு மாகாணத்திற்குப் பரப்புகிறது:

'வடக்கில் நிலைமை வேறு விதமாகவுள்ளது. வடக்கு இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிபோல் காணப்படுகிறது.

''பொலிஸ் படைகளிலும், ஆயுதப்படைகளிலும். நிர்வாகத்துறையிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். நாம் அனைவரும் ஒரே குடும்பம் என்று கூறுவதால் மட்டும் என்னபயன்?

''இருதேசிய இனமும்பிளவுபடும் நிலையிலுள்ளது. எப்பொழுது இந்த இரு இனங்களும் பிளவுபடும் என்பது தான் எமக்குத்தெரியாது. என்னைப் பொறுத்தமட்டில் வெகுவிரைவில் இதுநிகழலாம் என்று நினைக்கிறேன்.

''சுதந்திரத்துக்காகப் போராடும் ஒரு தேசிய இனத்தின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க, தீர்க்கதரிசனம் உள்ள ஒரு தலைவர் தேவை அப்படியான தலைவர் எம்மத்தியில் இல்லை'' என்றார். (இ-வெ]

# பாவற்குளத்தில் ராணுவத்தினர் திடீர்ச்சோதனை

# ஆயுதசாலை கண்டுபிடிப்பு!

# துவக்குகள், தோட்டா, உபகரணங்கள் மீட்பு!!

(யாழ்ப்பாணம்)

வவனியா தேர்தல் தொகுதியிலுள்ள பாவற்குளம் எனுமிடத்தில், நேற்று முன்தினமிரவு இராணுவத்தினர்நடத்திய திடீர்ச்சோதனையில், ஆயுதத்தொழிற்சாலை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், துவக்குகளும், ஏராளமான தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு படை உயர் அதிகாரி ஒருவர் நேற்று ''ஈழநாடு''விடம் தெரிவித்துள்ளார்,

கண்டுபிடிக்கப்பட்ட 'ஆயுதத் தொழிற்சாலை' சம்பந்தமாக வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம், அவரது மகன் ரூபன் (12 வயது), கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் ரூபன் மட்டும் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்றும் ஏனைய மூவரும் வவனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

'ஆயுதத் தொழிற்சாலை' கண்டுபிடிக்கப்பட்டபோது சில துவக்குகளும் துவக்குகளைத் தயாரிக்கும் உபகரணங்களும், வெற்றுத்தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன என்றும், வெற்றுத் தோட்டாக்களில் ஏராளமானவை அரைவாசி நிரப்பப்பட்ட நிலையில் இருந்தது என்றும் மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

இத் 'தொழிற்சாலை' நீண்ட காலமாக இயங்கி வந்திருக்கிறதென்றும் ஏராளமான ஆயுதங்கள் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உயர் அதிகாரிகூறினார்.

குறிப்பிட்ட பகுதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்து சோதனை நடத்தியதாகவும் இச்சோதனையின் போதே தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது,

நிலைமை இவ்வாறிருக்க நேற்று கிளிநொச்சி, கைதடி, புத்தூர், சுழிபுரம் ஆகியபகுதிகளில் இராணுவத்தினர் கடுமையாக சோதனைநடத்தினர்.

## தாக்குதல்சம்பவம்: ஒருவர் நிலை கவலைக்கிடம்

[யாழ்ப்பாணம்]

இருநபர்களை இனந்தெரியாத சிலர் தாக்கி கத்தியால் வெட்டியதாகவும், ஒருவர் பலத்தகாயமடைந்ததாகவும். மற்றவர் சிறுகாயங்களுடன் பொலிஸில் சென்று புகார் செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பலத்த காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்யாழ். ஸ்டான்லி வீதி மணிக்கூட்டுக்கோபுர வீதிச்சந்திக்கு அருகாமையில் நேற்று நிகழ்ந்தது.

காலியை சேர்ந்தஇவர்களில் ஒருவரின் பெயர் சுனில் என்றும் மற்றவரின் பெயர் லியனகே என்றும் கூறப்பட்டது.

## விமானத்தில் தப்பி ஓடி அரசியல் தஞ்சம்!

வார்சோ, மார்ச் 21

போலந்தை சேர்ந்த 12 பேர் விமானமொன்றில் சுவீடனிற்கு தப்பியோடி அங்கு அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

போலந்திலிருந்து 240 கிலோமீட்டர் தூரத்திலுள்ள சுவீடனின் தெற்கு பகுதியிலுள்ள நகரமொன்றில் இவர்கள் சென்ற விமானம் இறங்கியதாக தெரிவிக்கப்பட்டது, [வெ]

## செய்தியாளர் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்!

### இராஜாங்க அமைச்சருக்கு புகார்

[கொழும்பு]

கம்பளை மகாவலி சேவை பௌத்தாலய அடிக்கல்நாட்டு விழாவில் செய்திசேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் பொலிசாரால் தாக்கப்பட்டது குறித்து இலங்கைஉழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

'த ஐலண்ட்' பத்திரிகை ஸ்தாபனத்தைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்கள் கடந்த ஞாயிறன்று கம்பளை பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் 'சன்' பத்திரிகையின் படப்பிடிப்பாளர் பொலிசாரின் நடவடிக்கையின் பின்னர் காணாமல் போய்விட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து உடனடியாக தலையிட்டு சம்பந்தப்பட்ட பொலிசார் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் பத்திரிகையாளர் இம்மாதிரி தாக்கப்படுவதை நிறுத்தும்படியும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்க செயலாளர் திரு, குருவிட்ட பண்டார ராஜாங்க அமைச்சர் திரு, ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

## விபத்தில் இருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் இச்சம்பவம் நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் நிகழ்ந்துள்ளது.

எழுதுமட்டுவாள் முகமாலையைச் சேர்ந்த சிவக்கொழுந்து

[8ம் பக்கம் பார்க்க]

## மூதாட்டி படுகொலை ரூ.25, 000கொள்ளை

[புலோலி]

கரவெட்டி வடக்கு காழையன் தோட்டத்தைச் சேர்ந்த மூதாட்டி பார்வதி பொன்னையா 82-வயது) படுகொலை செய்யப்பட்டு 25,000ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார்.

## பொலிஸ் சீருடையில் இப்படியும் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

பொலிஸ் சீருடையில் சென்று 797 ரூபா ரொக்கப் பணத்தை கொள்ளையடித்த சம்பவமொன்று முழங்காவில் கமநலச்சேவை நிலையத்தில் இடம்பெற்றது,

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது!

கடந்த சனிக்கிழமை பகல் முழங்காவில் கமநலச்சேவை நிலையத்திற்கு பொலிஸ் சீருடையில் சென்ற நபரொருவர் அங்கு லிகிதராகக் கடமையாற்றும் இ. நடராஜ

[8ம் பக்கம் பார்க்க]

## திருகோணமலை நவீன நகரமாகும்!

### ஜனாதிபதி தகவல்

[கொழும்பு]

''திருகோணமலை துறைமுகம் உலகின் தலைசிறந்த துறைமுகமாகமாற்றியமைக்கபடவுள்ளது. திருகோணமலையை நவீன நகரமாக மாற்றவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது''

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியும் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்.

## பத்திரிகையாளர் ஒய்வூதியம்; சம்பள நிர்ணய சபை!

### இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

''பத்திரிகையாளர்களுக்கான ஒய்வூதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இவர்களுக்கு சம்பள நிர்ணய சபையொன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பத்திரிகையாளர்கள் பிரச்னைகள் தீர்த்து வைக்கப்படும்.''

இவ்வாறு ராஜங்க அமைச்

[8ம் பக்கம் பார்க்க]

## விளம்பரம்

### தேவை

யாழ். பெரியகடை கிருஷ்ண பவான் சைவ ஹோட்டலுக்கு சமையல் ஆட்கள், பரிசாரகர்கள் உடன் தேவை. நேரில் சந்திக்கவும். உரிமையாளர்.
(6599)

### விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கில் அரசடி வீதியில் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு வசதியாக உள்ளது. மேலும் விபரங்களிற்கு நேரில் தொடர்பு கொள்ளவும். க. கனகசபாபதி, அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
(6605)

பதியப்படாத ரொயற்ரு கோஸ்டர் (Toyata Coaster) பஸ், 26 ஆசனங்கள் 79 மொடல் விற்பனைக்குண்டு. விலை ரூபா 225000. தொடர்பு: திரு. 103, கொழும்புத்துறை றோட், கொழும்புத்துறை
(6600)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொழும்பு 2, யாவா ஒழுங்கை இல. 18ஐச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3730

சுப்பிரமணியம் கைம்பெண் சிவகாமசுந்தரி "சுகந்தகிரி" புத்தூர் வடக்கு, புத்தூர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.
1983 பங்குனி 16-ம் நாள்
(6575)

# "பாரதியால் உலக நாடுகளில் தமிழ் அறிமுகமாகிறது!"

## - தமிழகப் பேராசிரியர்

(அந்தனிஜீவா)

தமிழ்மொழிக்கும் வலுவும் பொலிவும் ஊட்டியவன் பாரதி. தமிழால் பாரதி உயர்ந்ததை போல் இன்று தமிழ் பாரதியால் உலக நாடுகளில் அறிமுகமாகிக்கொண்டிருக்கிறது, இதுவே பாரதியின் சிறப்பாகும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதி நூற்றாண்டு தேசிய விழாக் குழுவின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன் என்னிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு சமாதான கவுன்சில் தலைவரும், பாரதியை உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்திய வரும் 1981-ம் ஆண்டு சோவியத்நாடு நேருவிருது பெற்றவருமான பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன் மேலும் கூறுகையில்,

மகாகவி பாரதியைப்பற்றி சிறப்பான முறையில் அறிமுகம் செய்த பெருமை உங்கள் நாட்டு எழுத்தாளருக்கும் உண்டு. மறைந்த பேராசிரியர் கைலாசபதி இதற்கு பெரும் பங்கு ஆற்றியுள்ளார். பாரதியைப் பற்றி சிறப்பான ஆய்வுகள் செய்துள்ளார்.

பாரதி என்ற மகத்தான கவிஞனை தமிழ்நாடு காலம் கடந்து தான் புரிந்து கொண்டது. இந்திய ஜனநாயகத்தின் போராளியாக பாரதி திகழ்ந்துள்ளான்.

மகாகவி பாரதி வெறும் சொற்கோலம் போடும் கவிஞனல்ல, படைப்பாளியாக மாத்திரமல்லாது பங்காளியாகவுமிருந்தான். அவனை அரசியல் விடுதலை வீரன் என்று கூறவேண்டும்.

சாதீய சாபத்தின் காரணமாக பாரதியின் பங்களிப்பு மறைக்கப்பட்டது. ஆனால் நவ சிந்தனையாளர் பாரதியை இனங்கண்டு கொண்டு விட்டார்கள்.

மகாகவி பாரதியின் தமிழ் மொழி பல நாடுகளுக்கு அறிமுகமாகியுள்ளது. எந்த மொழியில் பாரதி பாடினானோ அந்த தமிழ்மொழியைப் பற்றி அறிந்து கொள்ள வேற்று மொழியினர் ஆர்வம் காட்டுகிறார்கள்.

ஐரோப்பிய மொழிகளில் பாரதி அறிமுகமாகியுள்ளான். இந்திய சுதந்திர போராட்டத்தில் அரவிந்தர், வ. வே. சு. ஐயர், பாரதி ஆகியோருக்கு பெரும் பங்குண்டு.

நாங்கள் இப்பொழுது தமிழ் நாடு தமிழ் எழுத்தாளர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சமுதாய விடுதலையை நோக்கமாகக் கொண்டு இந்த எழுத்தாளர் பேரவை இயங்கும்.

# "எப்படிப் படித்தாலும் வேலைபெறமுடியாத நிலை!"

## மட்டுவில் பாடசாலை விளையாட்டு விழாவில் 'நவம்'

(மட்டுவில்)

"அன்றைய கல்வி முறைக்கும் இன்றைய கல்விமுறைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அன்று ஒரு மாணவன் தான் திட்டமிட்டுப் படித்துப் பட்டம் பெற்று ஏற்ற உத்தியோகமும் பெறமுடியும். இன்று எப்படிப்படித்தாலும் படிப்பிற்கேற்ற உத்தியோகம் பெறமுடியாது.

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் மட்டுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. சி. பொன்னுத்துரை தலைமையில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து கூறியதாவது:

இன்று நாம் பெறும் வகுப்பறைக் கல்வி மாணவர்களின் கல்வியில் ஒருபகுதிக் கல்வியாகவே அமைகிறது. எமது இளைய தலைமுறையினர் எதிர்காலத்தில் ஓர் பயங்கரமான உலகை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அந்த பயங்கரமான எதிர்காலத்தைச் சமாளிக்க நல்ல பண்பும், எதையும் தாங்கும் பண்பும் ஆத்மீக சக்தியும் வேண்டும். ஆகவே அத்துணை பண்பையும் பயிற்சியையும் அளிக்கக்கூடியது இந்த விளையாட்டு மைதானப் பயிற்சியேயாகும்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரமும் உரை நிகழ்த்தினார். எம். பி. யின் பாரியார் திருமதி இரகுபதி நவரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சனசமூக நிலையத்தின் 35-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. ஆர். நவரத்தினம் தலைமையின் கீழ் நிலையமண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- பி. தம்பி, பி. தர்மலிங்கம், ரீ. பொன்னம்பலம், ஆர். இளையதம்பு, தலைவர்; ஆர். கிருஷ்ணமூர்த்தி, உப தலைவர்; எஸ். சரவணபவான், செயலாளர்: பி. இரவிச்சந்திரன், உப செயலாளர் என். யோகநாதன், பொருளாளர்; என். மனோகரன், உப பொருளாளர்; ஆர். ரவிகரன், நிலையப்பொறுப்பாளர்; வி. சுதாகரன், விளையாட்டுத் தலைவர்:- ரி. சிறீராகுலன், கணக்குப் பரிசோதகர்: கே. கிருபராஜா, நிர்வாக சபை உறுப்பினர்கள்: ஆர் நவரத்தினம், எஸ் லோகேந்திரன், என். சுகுமார், ரி. நாகராஜா, செ. சிறீகரன்.

● ●

யாழ்ப்பாணம், திருவள்ளுவர் சன சமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் போஷகர் திரு. க. சி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்காணுவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. க. சி. கிருஷ்ணன், தலைவர்- கி. தர்மகுலசிங்கம் (தலைவர்) செயலாளர் கி. நவரட்ணம், பொருளாளர் ஐ. சந்திரசேகரம், உப தலைவர் சி. அன்ரனிப்பிள்ளை, உப செயலாளர் க. சிறிரங்கன், பரிசோதகர் த. மகாராசா, நிர்வாக சபை உறுப்பினர்களாக ஒன்பது பேர்தெரிவு செய்யப்பட்டனர்.

## வட்டுக்கோட்டை

# கூட்டணிக் கிளைகளின் பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகளின் பொதுக்கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி முற்பகல் சிந்தங்கேணி மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. நீலன் திருச்செல்வம் இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொகுதியிலுள்ள 16 கூட்டணிக் கிளைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உரையாடுவார்.

மே மாதத்தில் நடைபெறவுள்ள கூட்டணியின் மாநில மகாநாட்டிற்கு முன்னதாக கிளைகள் யாவும் புதுஉறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும் என்றும் ஆகவே இக்கூட்டத்தில் சகல கிளைப் பிரதிநிதிகளையும் தவறாது வந்து கலந்துகொள்ளுமாறும் வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி அமைப்பாளர் திரு. ச. பூபாலசிங்கம் கேட்டுள்ளார். (க)

## வைத்தியர் நிபுணர்கள் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் எம். வேற்பிள்ளை யாழ். மருத்துவபீட விரிவுரையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு கொழும்பிலிருந்து சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் வி. ஜெயப்பிரகாசம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் ஏ. சிவபாதசுந்தரம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றதை அடுத்து அவரது இடத்திற்கு கொழும்பிலிருந்து குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் கே. இராசலிங்கம் இடமாற்றம் பெற்றுள்ளார். [க]

## வவனியாவில்

# இருதுப்பாக்கிமீட்பு,

## நால்வர் மீது விசாரணை

(வவனியா)

அனுமதிப்பத்திரம் இல்லாது வீட்டில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை பொலிஸ் கைப்பற்றியுள்ளது.

வவனியா-வாரிக்குட்டியூர் என்ற இடத்தில் இரண்டு துப்பாக்கிகளை வவனியா பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் நால்வர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை வவனியா பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## வணிகமாணவர் மன்றம் புனரமைப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன வணிகமாணவர் மன்றம் புனரமைக்கப்பட்டுள்ளது. சிலகாலமாக இயங்காமலிருந்து வந்த இம்மன்றம் முதலாம் வருடமாணவர்களின் முயற்சியாலும் இரண்டாம் வருட மாணவர்களின் ஒத்துழைப்புடனும் புனரமைக்கப்பட்டது.

அதிபர் உபஅதிபர் ஆகியோரின் அனுசரணையுடன் நடைபெற்ற மன்றப்புனரமைப்புக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரியப்பட்டனர் போஷகர் திரு. வே. பாக்கியநாதன் (உப அதிபர்) ஆலோசகர் திரு. எம். ஜெயரத்தினம் [ஆசிரியர்] கணக்காய்வாளர் க. கபசானந்தி தலைவர் மு. தர்மராசா உபதலைவர் ச. ஸ்ரீ செந்திவேல் செயலாளர் ச.ஞானசீலி, உபசெயலாளர் ந நாகராசா, பொருளாளர் செ. குணராசா பத்திராதிபர் திரு. சந்திரகாந்தன். (அ)

## புதிய தலைவர் தெரிவு

[பண்டத்தரிப்பு]

சங்கானை கிழக்கு கிராமோதய சபையின் புதிய தலைவராக நிற்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. நா. இராசா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு. ஆ. பஞ்சாயுதன் தலைமையில் நடைபெற்ற கிராமோதய சபையின் விசேட கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது [க]

# புலேந்திரனின் மனைவி ஐ. தே. க. அமைப்பாளர்

(வவனியா)

வவனியா மாவட்ட புதிய ஐ. தே கட்சி அமைப்பாளராக காலம் சென்ற அமைப்பாளர் புலேந்திரனின் துணைவியார் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

அத்துடன் இவர் ஐ.தே.க. கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்படவிருப்பதாக தெரியவந்துள்ளது. இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபன இயக்குனரில் ஒருவராக திருமதி புலேந்திரன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## வெள்ளியன்று விசவத்தனையில் வாரியார் பிரசங்கம்

(சுழிபுரம்)

பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை இரவு அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் 'வள்ளி திருமணம்' என்னும் பொருள் பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்தவுள்ளார். இதற்கான ஏற்பாட்டை அவ்வூர் வாலிபர்கள் செய்துள்ளனர்.

## தமிழ் நாட்டில்

# தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்திய

# 47 பேருக்கு கடுங்காவல் தண்டனை

சென்னை, மார்ச் 21

**தமிழ்நாடு தென்ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நாற்பத்தியேழு பேருக்கு கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் ஆதிதிராவிட வாசிகளைத்தாக்கி, அவர்களது குடியிருப்புகளுக்கு தீவைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களுக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது.**

தென்ஆற்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிட வாசிகளைத் தாக்கி, அவர்களது குடியிருப்புகளுக்கு தீயிட்டதாக 136 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பின்னர் நீதிமன்றில் இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட போது 47 பேரே குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இதனையடுத்து ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

விருத்தாசலம் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி பாலசுப்பிரமணியம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டது. கடுங்காவல் சிறைத் தண்டனைக்குள்ளான 47 பேரில் 27பேருக்கு இரண்டு வருட கடுங்காவல் சிறைத்தண்டனையும், 20 பேருக்கு ஏழு வருட கடுங்காவல் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட வாசிகளில் 24பேர் பலத்த காயத்துக் குள்ளாகியிருந்தனர் என்றும், பலரின் வீடுகள் மோசமாகத் தீயிடப்பட்டு உடமைகளும் சேதமாக்கப்பட்டதென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## றீகனைச் சுட்ட

## ஹிங்லியின் டாக்டரிடம் நஷ்டஈடு கோரப்படுகிறது!!!

வாஷிங்டன், மார்ச், 20

இருவருடங்களுக்கு முன்னர் ஜோன் ஹிங்லி என்ற அமெரிக்க இளைஞன் ஜனாதிபதி றீகனைச் சுட்டுக் கொல்ல முயன்றதும், அப்போது றீகனின் உதவியாளர்கள் மூவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே!

தற்போது படுகாயமுற்ற அம்மூன்று அதிகாரிகளும் ஜோன்ஹிங்லி என்ற அந்த இளைஞரின் மனோதத்துவ டாக்டர் மீது நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கொலராடோ மாநிலத்தைச் சேர்ந்த ஜோன் ஹொப்பர் என்பவரே அந்த டாக்டராவார். இவர் ஜோன் ஹிங்லிக்கு மனோதத்துவ சிகிச்சைகளை அவர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறங்கு முன்னர் ஐந்து மாதங்களாக வழங்கிவந்தாராம்.

அவ்வாறு இந்த டாக்டரால் வழங்கப்பட்ட சிகிச்சை ஹிங்லியை தகுந்த முறையில் சுகமடையச் செய்யவில்லை. அத்துடன் இவர் ஹிங்லியின் மனநிலையை அறிந்து அவரைக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கவில்லை. இதனாலேயே ஹிங்லி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினுள் இறங்க நேரிட்டது என்று அந்த அதிகாரிகள் மூவரும் டாக்டர் ஹொப்பர் மீது குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

ஜனாதிபதி றீகனின் பத்திரிகைச் செயலாளர் ஜேம்ஸ் பிறேடி, இரகசிய சேவை முகவர் திருமாதி மக்கார்த்தி, இளைப்பாறி பொலிஸ் ஊழியர் தோமஸ் டெலன்டி ஆகியோரே அந்த அதிகாரிகளாவார். இவர்கள் முறையே எட்டு, இரண்டு, நான்கு கோடி டாலர்களை அந்த டாக்டரிடமிருந்து நஷ்டஈடாகக் கோருகின்றனர்! (கி)

## 200 பேர் விடுதலை!

டாக்கா, மார்ச் 21

வங்காள தேசத்தில் அண்மையில் கைது செய்யப்பட்ட மாணவர்கள், அரசியல்வாதிகள் உட்பட 200 பேரை அந்த நாட்டு இராணுவ அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

இம்மாதம் 26-ந் திகதி வரவிருக்கும் 12-வது சுதந்திரதினத்தினை முன்னிட்டே இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக உயர் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (சூ)

## இலவச வகுப்பு

[பண்டத்தரிப்பு]

பண்ணாகம் இளைஞர் சமகத்தினர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவில் அப்பகுதி இளைஞர்களினதும், யுவதிகளினதும் ஆங்கில அறிவை விருத்திசெய்யுமுகமாக இலவசமாக ஆங்கில வகுப்புகளை பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து நடாத்தி வருகின்றனர். (ச)

## காரைநகரில் வாரியார்

[பண்டத்தரிப்பு]

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன்கோவிலில் எட்டாம் திருவிழாத் தினமான இம் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை இரவு அருள்மொழி அரசு திருமுருககிருபானந்த வாரியார் ''அர்ச்சுனன் தவநிலை'' என்ற பொருளில் கதாகாலாட்சேபம் நிகழ்த்துவார். (ச)

## ஆப்கானிஸ்தான் புதுவருட தினம்

காபூல், மார்ச் 21

ஆப்கானிஸ்தான் புதுவருட தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இத்தினத்தை முன்னிட்டு ஆப்கான் தலைவர் பப்ராககர்மல் செய்தி ஒன்றை நாட்டு மக்களுக்கு வெளியிட்டிருந்தார்.

அச்செய்தியில் தமது அரசு தொடர்ந்து ஆப்கானிஸ்தானின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்றும் அத்துடன் ஆப்கான் நிலவரம் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் திரு. கர்மல் தெரிவித்துள்ளார். (கி)

## ஜெருசலத்தில்

## அமெரிக்க - இஸ்ரேலிய அதிகாரிகள் பேச்சு

ஜெருசலம், மார்ச் 21

லெபனானிலிருந்து அந்நியப் படைகளை வெளியேற்றுவது குறித்து ஜெருசலத்தில் நேற்றுப்பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இப்பேச்சுக்களில் அமெரிக்க இஸ்ரேலிய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தென்லெபனானில் நிலைகொண்டுள்ள அந்நியத்துருப்புக்களை வெளியேறச்செய்தல் அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துதல், லெபனானுடன் இஸ்ரேலின் நட்புறவுகளைப் பலப்படுத்துதல் போன்ற விடயங்கள் இப்பேச்சுக்களின்போது ஆராயப்பட்டன.

இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. ஷமீர் கடந்த வாரம் வாஷிங்டன் சென்றிருந்தார். அவர் அங்கு நடத்திய அமெரிக்க உயர்அதிகாரிகளுடனான பேச்சுக்கள் குறித்தும் இப்பேச்சுக்களின்போது சிரேஷ்ட இஸ்ரேலிய அமைச்சர்களால் ஆராயப்பட்டது. (கி)

## சோவியத் யூனியனில்

## உதவி அமைச்சர் ஒருவர் பதவி நீக்கம்!

மாஸ்கோ, மார்ச் 21

சோவியத்யூனியனில் உதவி அமைச்சர் ஒருவர் பதவி நீக்கஞ்செய்யப்பட்டுள்ளார் இந்த உதவிஅமைச்சர் இலகு பொறியல் துறைக்குப் பொறுப்பானவராவார்.

லஞ்சம், ஊழல் ஆகியனவற்றில் ஈடுபட்டிருந்தார் என்று இவர்மீது பலகுற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இதனையடுத்தே இவர் பதவி நீக்கப்பட்டாரென்று சோவியத் அரசின் தலைமைப்பீடம் அறிவித்தது.

இந்த அமைச்சரின் லஞ்ச ஊழல் நடவடிக்கைகள் பற்றி சோவியத்தின் பிரபல செய்தி ஏடான 'பிராவ்தா' கட்டுரையொன்றைப் பிரசுரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## இந்திய 'அந்தாட்டிக்'

# ஆராய்ச்சிப் பயணக்குழு வெற்றியுடன் திரும்பியது!

## நெடுநாட்கள் குளிர்வலயத்தில் தங்கிய பெருமையையும் அது பெற்றது!

கோவா மார்ச்21

'அந்தாட்டிக்' தென்துருவப் பகுதிக்கு ஆராய்ச்சிகளை நடத்தச் சென்ற இந்திய ஆராய்ச்சிக்குழு வெற்றிகரமாக தாயகம் திரும்பியது.

இந்த ஆராய்ச்சிக்குழு கடந்த டிசம்பர் மாதம் முதலாந் திகதி 'அந்தாட்டிக்' பயணமானது. பன்னிரெண்டு சிப்பந்திகள் உட்பட 40பேர் இப்பயணத்தில் பங்குகொண்டனர்.

இந்த ஆராய்ச்சிக்குழு 82 நாட்களை இப்பயணத்துக்கென்று செலவழித்தது. இதில் 60 நாட்களை 'அந்தாட்டிக்' துருவப்பகுதியில் இக்குழு தங்கியிருந்து கழித்தது. இதன் மூலம் நெடுநாட்கள் கடுங்குளிர் வலயமொன்றில் தங்கிய ஆராய்ச்சிக்குழு என்ற பெருமையையும் இதுபெற்றுள்ளது. உயிரியல், புவியியல் காற்றுமண்டலவியல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை இக்குழுவினர் அங்கு நடத்தினர்.

1981ல் ஆண்டிலும் இந்திய ஆராய்ச்சிக்குழுவொன்று 'அந்தாட்டிக்' சென்றிருந்தது அப்போது அக்குழுவுக்குத் தலைமை வகித்த டாக்டர் காஸிம்என்ற நிபுணரே இம்முறையும் 'அந்தாட்டிக்' பயணத்தை வழிநடத்தினார்.

81ல் சென்ற குழுவினர் 'தட்சண கங்கோத்ரி' என்ற ஆராய்ச்சி நிலையமொன்றையும் 'அந்தாட்டிக்'கில் நிறுவிவிட்டு வந்திருந்தனர்.

இந்திய ஆராய்ச்சிக்குழுவினர் 'போலர் சேர்க்கிள்' என்ற நோர்வே நாட்டுக் கப்பலையே தமது பயணத்துக்கென பயன்படுத்தினர் இக்கப்பல் பனிக்கட்டிகளை வெட்டிச் செல்லும் சக்திவாய்ந்தது. அத்துடன் உள்ளிருப்பவர்களின் உடல் நிலைக்கமைய சீதோஷ்ண நிலையையும் வழங்கக்கூடியது.

இந்தியகடற்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர் ஒன்றும் இந்த ஆராய்ச்சிப் பயணத்தின்போது இக்கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டது.

இத்தகைய துருவ ஆராய்ச்சிகளை மேற்கொண்ட முதலாவது மூன்றாம் உலகநாடு இந்தியா என்பது குறிப்பிடத் தக்கது. (கி)

## தென்மாநில முதல்வர்கள் சபை அமைத்தனர்

சென்னை, மார்ச் 21

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் தென்மாநில முதலமைச்சர்கள் சபை ஒன்றை அமைத்துள்ளனர்.

இச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று பங்களூரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட மாநிலங்களைச் சேர்ந்த முதல் அமைச்சர்களான திரு. எம். ஜி. இராமச்சந்திரன், திரு. என். டி. ராமாராவ், திரு. ராமகிருஷ்ணஹெக்டே, திரு. டி. ராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நான்கு தென்மாநிலங்களினதும் அபிவிருத்திகுறித்து கலந்தாலோசனை நடத்துதல், மத்திய அரசின் உதவிகளைப் பெறும் வகையில் கூட்டாக ஒத்துழைத்தல் என்பனவே இச்சபையின் நோக்கமென்று தெரிவிக்கப்பட்டது.

மத்தியஅரசின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதோ அல்லது அதற்கு எதிராக செயல்படுவதோ தமது நோக்கமில்லையென்றும் இம் முதல்வர்கள் கூறினார்கள். (கி)

## யூனியன் அமைச்சர் கேதார்பாண்டே கடும் சுகயீனம்!

புதுடில்லி, மார்ச் 21

இந்திய முன்னாள் யூனியன் அமைச்சர் திரு. கேதார் பாண்டே மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இவர் தற்போது புதுடில்லியிலுள்ள தனியார்மருத்துவமனையொன்றில் சிகிச்சைபெற்றுவருகிறார். இவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதென்று வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன.

பிரதமர் திருமதி காந்தி ஜனாதிபதி ஸெயில்சிங், மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் ஆகியோர் திரு. கேதார்பாண்டேயின் இச்சுகயீனம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். (கி)

### மணிவாக்கு

பக்தர் தன்னைத் துறத்தல் போலவே அறிஞரும் தன்னைத் துறத்தல் அவசியமானது.

—எமர்சன்

# “உலகை மாற்றி அமைப்பதே மார்க்ஸின் சித்தாந்தம்”

## நூற்றாண்டு நினைவு விழாவில் கணேசலிங்கன்

(யாழ்ப்பாணம்)

“உலகை மாற்றி அமைக்கும் சித்தாந்தத்தை வெளியிட்ட துடன் மனித வளர்ச்சியின் விதிகளை ஆராய்ந்து கூறியதும், 1864ல் முதலாவது சர்வதேசியத்தை கட்டியதும், கம்யூனிஸ்டு அறிக்கையை 1848-ல் வெளியிட்டதும், ‘மூலதனம்’ என்ற நூல்மூலம் பாட்டாளிக்கு விடிவு காட்டியதும் கார்ல் மார்க்சை மனிதவரலாற்றின் மாமனிதனாக்கியது. அன்னார் மறைந்த நூற்றாண்டு நாளில் அவரையும் அவரது சிறப்புகளையும் நினைவுகூரும் இந்நாள் நம் வாழ்நாளில் சிறப்பான நன்னாளாகும்”.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மார்க்ஸ் நூற்றாண்டு நினைவு நாளின் தலைமை உரை நிகழ்த்திய பிரபல எழுத்தாளர் செ. கணேசலிங்கன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செ. கணேசலிங்கன் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது:

‘கணிதமும் பௌதிகமும் விஞ்ஞானமயப் படுத்தப்பட்ட பின்னர் மனிதவரலாற்றை விஞ்ஞான பூர்வமாக அணுகியவர் மார்க்ஸே. தொன்மைப் பொதுவுடமைச் சமூக அமைப்பு உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியோடு அடிமைச்சமுதாயம், நிலவுடமைச்சமுதாயம், முதலாளித்துவ சமுதாயமாகமாறி வந்துள்ளது. முதலாளிகளும் தொழிலாளரும் ஆக மனிதஇனம் மாறிய இச் சமுதாயத்தின் ஒரு காலகட்டத்தில் தொழிலாளர்கள் முதலாளித்துவஅமைப்பைஒழித்து சோஷலிசப் புரட்சியை ஏற்படுத்துவர். பின்னர் அதன் வளர்ச்சி எல்லோருக்கும் எல்லாம் கிட்டும் பொதுவுடமையாக மலரும்.

மார்க்கின் அரசு பற்றிய கண்ணோட்டம் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக எம். ஏ. வகுப்பு மாணவர் மு. திருநாவுக்கரசு பேசும்போது, அரசு என்பது இறைவனால் வகுக்கப்பட்டது எனவும் அறிவின் உருவம் எனவும் அறம், நீதியின் பிரதிபிம்பம் எனவும் இயற்கையாக எழுந்தது எனவும் பல்வேறு விதமாக அரசு என்ற அமைப்பிற்கு விளக்கம் கொடுத்த காலத்தில் மார்க்ஸ்வந்து அது ஓர் பலாத்காரத்தின் வடிவம் எனவும் வர்க்க சமரசம் நிலைநாட்ட எழுந்ததாகக்காட்டி சொத்துடைவரை பேணும்அமைப்பு எனவும் விளக்கினார். புரட்சி என்பது அரசைக்கைப்பற்றுவது மட்டுமல்ல அரசு யந்திரத்தை நொருக்குவதுமாகும் அரசு அமெரிக்காவில் புதிதாக எடுத்த வடிவம் வேறு ஆகிய, ஆபிரிக்க நாடுகளில் ஏற்படுந்திய வடிவங்கள் வேறு எனவும் விரித்துக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக பொருளாதார விரிவுரையாளர் திரு. அ. வரதராசன் பேசும்போது கூறியதாவது:

“1929ல் ஏற்பட்ட பொருளாதார அமுக்கம் அமெரிக்கா ஜேர்மனி, ஜப்பான், பிரிட்டன் போன்ற முதலாளித்துவ நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ளது.”

# ஆத்மீக நிகழ்ச்சியில் சாத்தானின் குறுக்கீடு

இந்த ஆண்டு 01-01-1983 தொடக்கம் இலங்கை வானொலிக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி சேவை 2இல் இரவு 7 மணி தொடக்கம் 10-30 மணி வரையும் சினிமா இசைத்தட்டை ஒலிபரப்புகிறது. இந் நிகழ்ச்சியானது சேவை ஒன்றில் 8 மணியிலிருந்து 9 மணி வரை ஒலிபரப்பாகும் ஆத்மீக நிகழ்ச்சியான இஸ்லாமிய நிகழ்ச்சியைக் கேட்காமல் ரசிகர்களை திசைதிருப்பி தீயரசனையை அனுபவிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறது. முஸ்லிம் நேயர்கள் மட்டுமல்ல ஏனைய மதத்தினரும் அதிலுள்ள விசேஷ அம்சங்களைக் கேட்டு ரசிக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இதுதடுத்து விடுகிறது. ஆனால் இதற்கு வானொலி தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சியாளர் கீழ்க்கண்ட விதமாக பதில்விளக்கம் அளிக்கிறார்கள். (அதாவது) இஸ்லாமிய நிகழ்ச்சியும், சினிமா நிகழ்ச்சியும் வெவ்வேறு மீட்டரில் நடைபெறுகிறது. விருப்பமான நேயர்கள் விரும்பியதைக்கேட்கலாம் என, ஆனால் எனது வேண்டுகோள், ஆத்மீக நிகழ்ச்சியின் நேரத்தில் சாத்தானின் குறுக்கீடு இருக்கக்கூடாது. வழமைபோல் 8மணியிலிருந்து 9 மணிவரையும் நடைபெறும் ஒரு புனிதமான சேவை நேரத்தில் சாத்தானைக் குறுக்கே விடவேண்டாம். வேண்டுமானால், அந்நேரத்தில் அதாவது 8 மணியிலிருந்து 9 மணிவரையும் சேவை 2இல் சைவ நற்சிந்தனை போன்ற ஆத்மீக நிகழ்ச்சியாவது ஒலிபரப்பி நேயர்களை ஆத்மீகத்துறையில் வளர்த்தெடுக்கும்படி மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்வதோடு தேவாலயத்துக்குப் பக்கத்தில் கள்ளுத்தவறணையையும் வைத்துவிட்டு விருப்பமானவர்கள் விருப்பமான இடத்திற்குச் செல்லலாம் என்ற ஜனநாயகப் பாணியில் தத்துவம் பேசுவதை தவிர்த்து நாட்டின் நன்மை கருதி மக்களை நல்வழியில் இட்டுச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும், அரசாங்கமும் ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

## மக்கள் கருத்து

ஏ. ஸி. எம். பரீத்
80, அராலிவீதி,
யாழ்ப்பாணம்.

# நமது நோக்கு

## அமரக் கலைஞர்

‘அழகுடைய பொருள் என்றும் இன்பம் அளிப்பதே’ என்று ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் (Keats) பாடினார்.

அவர் வாழ்ந்த இங்கிலாந்திலோ அவருக்கு முற்பட்ட காலத்தில் அழகுக்கும் மனிதனுக்குமிடையே எவ்வித தரகரும் தேவையில்லை என்ற இயக்கம் பரந்து மக்கள் வாழ்விலும், அரசியல் அலுவல்களிலும் வலுப்பெற்றிருந்தது. கலை கலைஞர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்ட காலம் அது.

கம்பீரமான தேவாலயங்கள், பெயர்பெற்ற உருவப்படங்கள், சங்கீதக்கருவிகள், கலை பற்றிய நூல்கள் யாவும் தீக்கிரையாகின.

சிற்பம், சங்கீதம், ஓவியம் நடனம், நாடகம் போன்ற கலைகள் மனிதனின் தூய உணர்ச்சிக்கு தீங்கு விளைக்கின்றன என்ற கருத்தைக் கொண்ட ஒரு அதிதீவிர “வைதிகமே” [Puritanism] அந்த இயக்கத்தின் பெயர்.

அது இன்று மறைந்துவிட்டபோதும் அதன் ‘தூவானம்’ ஆங்கில அமெரிக்க வாழ்க்கை முறையில் இன்னும் காணப்படுகின்றது.

பௌத்த பண்பாட்டின் இருப்பிடமான இலங்கையில் இந்து நாகரிகத்தின் உறைவிடமான இந்தியாவில் இத்தகைய இயக்கம் தலைதூக்கவில்லை. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற லட்சியத்துக்கும் கலைக்கும் எவ்வித பகைமையுமிராது.

சிங்களக்கலை, இந்துப் பண்பாடு பற்றிய பல பெரிய ஆராய்ச்சி நூல்களை உலகுக்களித்தவர் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள்:

கலாயோகியின் ஆராய்ச்சி சிங்களக்கலையின் சிறப்பை உலகுக்கு விளக்கியது போல் அக்கலையின் விருத்திக்கு உழைத்தவர் இன்றைய மாமேதை உலகப் புகழ்பெற்ற முதலியார் ஏ. ஸி. ஜீ எஸ். அமரசேகரா என்பதை அறியாதார் எவருமிலர்.

மூன்று வாரங்களுக்கு முன் தம்முடைய 100வது பிறந்த தினத்தைக்கொண்டாடிய ஓவியக்கலைஞர், கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்ற அவருடைய ஓவியக்காட்சியை கண்டு களிப்படைந்ததோடு, பலரின்பாராட்டையும் பெற்று மகிழ்ந்தார். தன்னை அறியவர் தலைவனை அறிவாரென்ற உண்மைக்கு உதாரணமாகத்தன்னையே தான் வரைந்த ஓவியம் மிகச் சிறப்புடையதாக மதிப்பிடப்பட்டது.

கலைஞர்கள் உயிர் வாழும் போதே இவ்வித பாராட்டுக்கும் கௌரவத்துக்கும் உரித்தாவதில்லையென்பது கடந்தகால உண்மை.

இதற்கு விதி விலக்காக வாழ்ந்த ஓவியக்கலைஞர் நீண்ட வாழ்வைப்பெற்றிருந்தது. ‘அமரக்கலைஞர்’ என்ற பட்டத்துக்கு உதவிய காரணங்களில் ஒன்றாகும்.

இத்தகைய கலைஞர்கள் என்றும் அழிவதில்லையென்பதற்கு அவரே கருத்து வழங்கியிருப்பது சிந்தனைக்கு விருந்தாகின்றது.

நூறுவயதை எட்டிய கட்டத்தில் தளர்வடைந்த அமரர் அமரசேகரா தினந்தோறும் ‘டெயிலி நியூஸ்’ பத்திரிகையில் மரண அறிவித்தலை கவனமாகப் படிப்பாராம்.

தம்முடைய பெயர் அங்கு காணப்படவில்லையென்றதும், தாம் உயிரோடிருப்பதை உறுதிப்படுத்தி தம்முடைய வேலையில் தொடர்வதே வழக்கமென்றார். நகைச்சுவையும் ஒரு சிறந்த கலையே!

ஒருவருக்கு பேராற்றல் படைத்த தொழிலில் மெய்மறந்து ஈடுபடுதலும், சிக்கலான வேலைக்கு சாந்தமளிக்கும் நகைச்சுவையும் முதலியாரைப் போன்ற பல மேதைகளின் நீண்ட வாழ்வின் ரகசியங்களென்பதில் ஐயமில்லை.

இது இறுதிக்கிரியைகள் நடைபெற்று அக்கினிக்கு இப்பெரியாரின் பூதவுடம்பு ஆகுதியாக வழங்கப்படும் சமயத்தில் முனிவரின் தீர்ப்பே இப்பெரியாரின் நிறைவு பெற்ற வாழ்வுக்கு முடிவு கட்டுகின்றது.

தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற்
தோன்றாமை நன்று

# விளையாட்டில் வினையா?

பங்குனிப் புழுக்கம் தொடக்கு படையினர் பரீட்சை வரைக்கும் பல தடைகளைத் தாண்டவேண்டிய இக்கட்டு இன்று எங்கள் இளைஞர்களுக்குண்டு. தற்சமயம் நடைபெறும் கிரிக்கட் போட்டிகளே அவர்களுக்குத் தஞ்சமளிக்குமென்பது எமது கருத்து.

ஒரு சிலருக்கே மகிழ்ச்சியளித்துவந்த கிரிக்கட் இன்று யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பெருவிருந்தாக அமைகின்றது. நாட்டின் மற்றைய பகுதிகளிலும் அவ்வாறே!

பெரிய போட்டிகளென்றால் கொழும்பில் ரோயல் தோமியன் போட்டிபோல், இங்கும் நாடு நகரமெல்லாம் விழாக்கோலம்!

‘பயங்கரவாதத்தை’முறியடிப்பதில் அலைமோதும் படையினரின் ஜீப்புகள் இந்த பைசிக்கிள் ஊர்வலங்களைத் தடைசெய்வதில்லை. கிரிக்கட் போட்டியின் சாட்டில் பல பக்க களியாட்டங்கள் நடைபெறுவதும் சாதாரணமே. நாரம் கிடுகிடுக்கும் குதூகலங்கள்!

களியாட்டங்கள் குழப்பமாக மாறும் கட்டம் எதுவென்று சொல்லிக்கொள்ள முடியாத நிலையில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதானால், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களே அதற்குப் பொறுப்பேற்கவேண்டும். அவர்களின் கண்காணிப்பு எவ்வளவு அவசியம்.

ஆங்கிலேயர் அறிமுகப் படுத்திய இந்த அருமந்த விளையாட்டை ரசிப்பவர்கள் எவ்வித குழப்பத்தையும் விரும்பமாட்டார்கள்.

சுமார் 50 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாண முற்றவெளியில் உதைபந்தாட்டம் போட்டியென்றால், அது சூடு பிடிக்கும் நேரத்தில், சுமார் 30 பேர்களை மைதானத்துக்குள் பந்துடன் காண்பது வழக்கம். ஆவேசத்தில் பார்வையாளர்கள் சிலர் விளையாட்டு வீரர்களாக மாறும் காட்சி அது. சில சமயங்களில் அது போராட்டமாய் விடுவதுமுண்டு.

சட்ட நுணுக்கங்களுக்கமைய மத்தியஸ்தர்களை மதித்து, விளையாடும் பண்பு இன்று பன்மடங்கு வளர்ந்திருக்கிறது. நாகரீக ஆட்டம் எவரையும் கவருமல்லவா?

விளையாட்டின் நுட்பதிட்பத்தை விளங்கிய வீரர்கள், பார்வையாளர்கள், பெரும்பொறுப்புணர்வுடன் பங்குபற்றும் பெருநிகழ்ச்சி இன்றைய கிரிக்கட்;

இருப்பினும் குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு போல் இங்கும் அங்கும் சில குழப்பக்காரர்கள் காணப்படுவதால் இன்பமளிக்கும் விழா மாசுபடுத்தப்படுகிறது.

பாடசாலை அதிகாரம், பொதுஜன அபிப்பிராயம் இவ்வித குழப்பம் தலையெடுக்காது முளையிலேயே கிள்ளிவிட உதவவேண்டும்.

### தவக்கால நற்சிந்தனை



## விசுவாசத்தை அதிகப்படுத்தும்

நீர் உம்மை பல வழிகளிலும், பலர் வழியாகவும் வெளிப்படுத்துகிறீர். ஆனால் நாம் உம்மை எமது இவ்வுலக மனிதகண்ணோட்டத்தில்நோக்குவதால் பலதடவைகளில் உம்மை அறிய மறுக்கிறோம். அல்லது அறிய முடிவதில்லை. உம்மில் எமக்கு இருக்கும் சிறு விசுவாசம்தான் எம்மை இவ்வளவு நாளும் பாதுகாத்து காப்பாற்றியது. கடுகளவு விசுவாசம் இருக்குமானால் மலைகளையே பெயரச் செய்வீர்கள் என்று கூறினீரே. எங்கள் விசுவாசத்தை அதிகப்படுத்தும். எங்கள் சிறு விசுவாசத்தின் பொருட்டு எமக்கு மன்னிப்பும் விடுதலையும் தந்தருளும்.

அருட்செல்வன் ம. ரூபன்

## அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதி

(புலோலி)

மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சிவராமலிங்கம் ஆனந்தகுமாரசாமி இம் மாதம் 15-ம் திகதி தொடக்கம் அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## பொதுச்செயலாளர்

(துணுக்காய்)

வேலணை சர்வோதய சமிதியின் பொதுச் செயலாளராக வேலணை 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பாலேந்திரன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

### மகாவலி அபிவிருத்தித் திட்டம்:

# 10 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்

## அமைச்சர் 'காமினி' அறிவிப்பு

(கொழும்பு)

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழான சகல திட்டங்களும் 1986-ம் ஆண்டில் முடிவடையும். அத்திட்டத்தின்கீழ் உள்ள சகல நீர்த்தேக்கங்களின் மூலம் 10 லட்சம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதிசெய்து கொடுக்கப்படும்.

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பட்ஜட் விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல்லின் 6-வது பட்ஜட் இங்கு பல்வேறு கோணங்களிலிருந்தும் பல்வேறு அரசியல் கொள்கைகளின் அடிப்படையிலும் ஆராயப்பட்டது.

இன்று நிதி நெருக்கடி எம்மை மட்டுமல்ல உலக நாடுகளையே ஆட்டிப்படைக்கிறது. எனவே நிதி நெருக்கடி ரீதியிலிருந்தே இந்த வரவு-செலவுத்திட்டத்தை நாம் ஆராயவேண்டும்.

அழிவின் விளிம்பில் நாமும் நாடும் இன்று இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுகின்றன. அந்த அழிவின் விளிம்புக்கு நாம் சென்றதற்கான காரணம் யார்? கடந்த ஆட்சியினரே நாட்டை இன்றைய மோசமான நிலைக்குக் கொண்டுவந்தனர்.

77-ம் ஆண்டுமுதல் 82-ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் 3,000 கிராமிய குளங்களை நாம் அமைத்துள்ளோம். இந்தக் குளங்களினால் ஐ.தே.க, சுதந்திரக்கட்சி என்ற கட்சி பேதமின்றி சகலருமே பயன்பெறுகின்றார்கள்.

## இன்று ஓவியமேதையின் கிரியை

(கொழும்பு)

ஓவிய மேதை கேட்முதலியார் அமரர் ஏ. ஸி ஜி. எஸ் அமரசேகரவின் அந்திக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. கலாபவனத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர் இவர் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## பொன் விழாவும் கந்தபுராண விழாவும்

(சுழிபுரம்)

அகில இலங்கைச் சைவ மகாசபையின் பொன்விழாவும் கந்தபுராண விழாவும் வரும் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வீதியில் நடைபெறவுள்ளது. கந்தபுராணஉரை நூல் ஆசிரியர்கள் சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசு, டாக்டர் பண்டிதமணி எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் பொன்னாடை போர்த்து கௌரவிக்கவுள்ளனர்.

### பாரதி நூற்றாண்டு இறுதி நிகழ்ச்சி:


# இந்திய அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவு



ரகுநாதன்



திருமதி ராஜம் கிருஷ்ணன்



டாக்டர்எஸ்.ராமகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம்)

பாரதிநூற்றாண்டு விழாவை யொட்டி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் ஏற்பாட்டின் இறுதி நிகழ்ச்சியாக 24-ம் திகதி வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இந்திய அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறவிருக்கின்றன.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் தலைமையில் நடைபெற விருக்கும் இந் நிகழ்ச்சியில் தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல விமரிசகரும் எழுத்தாளருமான ரகுநாதன் பிரபல எழுத்தாளர் திருமதி ராஜம் கிருஷ்ணன், டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

## இந்துசமய ஆராய்ச்சிநிலையம்: நாளை திறப்பு விழா

(கொழும்பு)

இந்துசமயம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக அனைத்துலக இந்து சமய ஆராய்ச்சி நிலையத்தை நாளை புதன் கிழமை பிற்பகல் அமெரிக்க ஹவாய் நாட்டின் சைவ சித்தாந்த நிலயத்தின் தலைவர் தவத்திரு சிவாய சுப்பிரமுனிய சுவாமியினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படும்.

அன்றைய தினம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மாலை பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

கொள்ளுப்பிட்டி செல்சியா காடின்ஸ் 10-ம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலே இந்நிலையம் அமையவுள்ளது.

இந்நிலையம் இலங்கையில் அமைக்கப்படவிருப்பதால் பல நாடுகளிலுமுள்ள இந்து சமய அறிஞர்கள், பெரியோர்கள், என்போர் காலத்துக்குக் காலம் இந்நிலையத்துடன் தொடர்பு கொண்டு இந்து சமயம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்நிலயம் வழிவகுக்கின்றது. இந்நிலையம் திறக்கப்படவிருப்பது இலங்கை வாழ் இந்து சமய மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமையும்.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

பெலியத்தை நகரசபை மைதானத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 925-வது இலங்கை தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு

**07 G 0709**

ரூபா 2,00,000-00

2-ம் பரிசு

**02 R 0422**

ரூபா 75,000-00

3-ம் பரிசு

**10 Y 0972**

ரூபா 25,000-00

தலா ரூபா 900 ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 08 A 0325 | 08 A 0803 |
| 11 A 0261 | 12 A 0876 |
| 20 A 0055 | 21 A 0691 |
| 22 A 0527 | |
| 05 B 0963 | 09 B 0266 |
| 09 C 0503 | 14 C 0044 |
| 10 D 0140 | 11 D 0770 |
| 15 D 0701 | |
| 02 E 0255 | 06 E 0058 |
| 08 E 0094 | 13 E 0195 |
| 14 E 0669 | 17 E 0869 |
| 02 F 0468 | 05 F 0435 |
| 15 F 0316 | 21 F 0061 |
| 05 G 0434 | 06 G 0111 |
| 08 G 0724 | 09 G 0135 |

| | |
|---|---|
| 21 G 0349 | |
| 03 H 0924 | 19 H 0641 |
| 23 H 0454 | |
| 03 J 0591 | 03 J 0712 |
| 20 J 0643 | |
| 01 K 0231 | 07 K 0220 |
| 11 K 0089 | 12 K 0501 |
| 01 L 0052 | 01 L 0360 |
| 06 L 0254 | 12 L 0206 |
| 05 M 0976 | 10 M 0910 |
| 21 M 0917 | 02 N 0413 |
| 10 N 0755 | 13 N 0128 |
| 02 O 0346 | 03 O 0853 |
| 05 O 0607 | 11 O 0385 |
| 08 O 0766 | 02 P 0602 |
| 10 P 0512 | 04 Q 0025 |
| 04 Q 0704 | 05 Q 0924 |
| 10 Q 0079 | 16 Q 0322 |
| 21 Q 0367 | 11 R 0067 |
| 13 R 0743 | 16 R 0982 |
| 17 R 0838 | 19 R 0961 |
| 07 S 0055 | 13 S 0756 |
| 15 S 0705 | 02 T 0845 |
| 08 T 0535 | 19 T 0621 |
| 19 T 0658 | 20 T 0794 |
| 01 U 0153 | 05 U 0428 |
| 15 U 0834 | 16 U 0728 |
| 17 U 0299 | 18 U 0227 |
| 02 V 0518 | 10 V 0388 |
| 04 W 0154 | 08 W 0039 |
| 11 W 0235 | 11 W 0269 |
| 14 W | 15 W 0166 |
| 15 W 0346 | 18 W 0760 |
| 07 X | 06 X 0164 |
| 11 X (658 | 19 X 0408 |
| 01 Y 0055 | 12 Y 0004 |
| 07 Z 0444 | 08 Z 0897 |
| 21 Z 0437 | |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

### சுழிபுரம்

### அருள்மிகு - பத்திரகாளியம்மன்

# பொங்கல்

சுழிபுரத்தின் கண்ணே சிவன், சக்தி, விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்கள் கோவில் கொண்டருளிய திருத்தலங்கள் மிளிர்கின்றன. சுழிபுரம் சிராமசபைக்கு அண்மையில் பத்திரகாளி கோவில் கொண்டருளிய ஆலயம் அமைந்துள்ளது.

இயற்கை அமைப்பும், தன்னிறைவும் ஒருங்கிணைந்த இக் கிராமத்தின் அறுவடை முடிந்தபின் முதலில் வரும் பொங்கல் தேவியின் பொங்கலே எனப் பல பெரியோர்கள் கூறுகிறார்கள். வருடாந்தம் வழமைபோல் பங்குனி மாதத்து இரண்டாம் செவ்வாயில் நடைபெறும் பொங்கல் இன்று நடைபெறுகிறது. பங்குனி மாதத்து முதற் செவ்வாயில் விளக்கு வைத்து தேவியின் விடையைக் கேட்டு இரண்டாம் செவ்வாயில் பொங்கல் படையல் படைத்து பெருவிழா நடைபெற்றுவருகிறது.

பல சந்ததிகளுக்கு முன்பு ஆண்டு வரையறுத்துக் கூற முடியாத ஒரு காலகட்டத்தில் முனி புங்கவரொருவர் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் தற்காலிகமாக வந்து தங்கினாரென்றும், தொடர்ந்து சக்தி வழிபாடு செய்துவந்த அவர் மறைந்தருளுமுன் 'இவ்விடத்தே உள்ள கிழுவை மரத்தினருகே சக்தி பூசைக்குரிய யந்திரத் தகடு இருக்கிறதென்றும் தொடர்ந்து பொங்கல், பூஜை வழிபாடு செய்து வருமாறும்'' கூறி மறைந்தருளினாரென்றும் பல பெரியோர் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அந்தப் புனிதமான இடமே அருள்மிகு பத்திரகாளி ஆலயமாக அருள் பொழிகின்றது.

பரிபாலன சபையின் கண்காணிப்பின்பேரில் பரிபாலிக்கப்படும் இவ்வாலயத்திற்கு கிராமத்து வயல்களிலிருந்து கிடைக்கப்பெறும் நெல், பழவகைகள் படையல் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள சகலஇடங்களிலுமுள்ள மக்களும் சம உணர்வோடு தமது காணிக்கையைச் செலுத்தி வருகின்றனர்.

தேவியானவள் இப் பொங்கல் பெருநாளில் பக்தர்களின் காணிக்கையைப் பெற்று அருள்சுரக்கும் பத்திரகாளியாகவும் ஆடி மாதத்தில் நடைபெறும் உற்சவகாலத்தில் உமாதேவி, அபிராமி, மீனலோசனி, தரங்கிரி, சௌந்தரி, நிரந்தரியாகவும் நவராத்திரிவிழாக் காலத்தில் பத்மலோசனி, துர்க்கை, கமலாசினியாகவும் தீபாவலி காலத்தில்போது சங்கரி, கௌரியாகவும் திருவெம்பாவைப் பூசைக்காலத்தில் அர்த்தநாரி, அம்பிகை, பார்வதி மலைநாயகி வைகறைப் பாவையாகவும் காட்சி கொடுத்து அடியாரைத் தன்பால் ஈர்த்து அருள் சுரக்கின்றாள்.

ஆசைப்பிள்ளை பொன்னையா

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-01 | சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்] |
| 6-30 | 'எலெக்ட்ரிக் கம்பனி' சிறுவர் கல்வி நிகழ்ச்சி [ஆங்கிலம்] |
| 7-00 | செய்திமஞ்சரி [தமிழ்] |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | விளையாட்டுப் பயிற்சி [ஈட்டியெறிதல்] |
| 7-30 | 'கலையரங்கம்' மகாராஜபுரம் வி. சந்தானம் இன்னிசைக் கச்சேரி |
| 8-15 | செய்திமஞ்சரி [சிங்களம்] |
| 8-30 | குறுந்திரைப்படம் |
| 9-00 | பல்வேறு அம்சங்கள் பற்றிய தகவல்கள் [சிங்களம்] |
| 9-15 | பிரிட்டன் 'எப்-ஏ' கிண்ண உதைபந்தாட்டம் |
| 9-30 | செய்தி மஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | உதைபந்தாட்ட தொடர்ச்சி |
| 10-30 | நிகழ்ச்சிகள் முடிவு |

## மீண்டும் தெரிவு

[நீர்வேலி]

நீர்வேலி கிராமோதயசபையின் தலைவராக மீண்டும் திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி தெரிவுசெய்யப்பட்டார்.

# வேலைவாய்ப்பு மோசடி வழக்கு ஒத்திவைப்பு!

[மானிப்பாய்]

வேலைவாய்ப்பு மோசடி தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 25-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அளவெட்டியைச் சேர்ந்த வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவரிடமிருந்து கப்பலில் வேலை பெற்றுக்கொடுப்பதாகக் கூறி 45 ஆயிரம் ரூபா வாங்கி மோசடி செய்ததாக பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை என்பவர்மீது குற்றஞ்சாட்டி யாழ் விசேட குற்றப் புலனாய்வுத் துறை பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இவ்வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் சாட்சியமளித்த வளக்காளியான வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம் எதிரிசாரிபில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

வழக்காளி எதிரிக்கு எழுதியதாக கூறப்படும் கடிதமொன்றை எதிரி தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்து கேள்விகள் எழுப்பினார்.

விசாரணையடுத்து நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் ஏப்ரல் மாதம் 25ம் திகதிக்கு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## சம்பள உயர்ச்சி

(வேலணை)

தெனகோன் சம்பள அறிக்கையின்படி சம்பளம் மாற்றியமைக்கப்பட்ட கடிதங்களையும் 1982ம் ஆண்டு வழங்கப்படவேண்டிய ஆண்டுச் சம்பள உயர்ச்சியையும் வேலணை கல்வி வட்டாரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளருக்குக் கடிதம்எழுதியுள்ளார்.

எதிரிசாரிபில் சட்டத்தரணி சிவ ஸ்ரீதரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் ஆஜரானர்,

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். (க)


# VRV

போக்குவரத்துச் சேவை வழங்கும்



# புதிய கடுகதி பஸ் சேவை!

கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு

21-03-83 திங்கட்கிழமை முதல் நடைபெறுகிறது!

தினசரி இரவு 8-15 மணி கொழும்பு - யாழ்ப்பாணம்

தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம் - கொழும்பு

25 - 3 - 83 தொடக்கம்
கொழும்பு-கொடிகாமம்-நெல்லியடி-பருத்தித்துறை
யாழ்ப்பாணம் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

கொழும்பில் ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்:

V. R. V. ஸ்தாபனம்,
271, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி இல. 32540
34800

கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்,
பம்பலப்பிட்டி,
தொலைபேசி இல. 85592
81986

அஜந்தாஹோட்டல் லிமிட்,
125, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு-11.
தொலைபேசி இல. 28089
32769

வீடியோ புளொசம், (சவோய் தியேட்டர் முன்பாக) காலி வீதி, வெள்ளவத்தை.
தொலைபேசி: 83053

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்:

V. R. V. ட்ரான்ஸ்போர்ட்,
சேகரம் கட்டிடம்,
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 24162

றிக்கோ ஹோட்டல்,
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 22464
23889

Y. M. C. A.
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23151

பஸ் புறப்படும் நேரங்கள் :

மாலை 7-15 மணி: வெள்ளவத்தை சவோய் தியேட்டர் முன்பாக
மாலை 7-30 மணி: பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்
மாலை 8-00 மணி: கோட்டை புகையிரத நிலையம் முன்பாக
மாலை 8-15 மணி: செட்டியார் தெரு கோவிலடி முன்பாக

- அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று புத்தம்புதிய சொகுசு பஸ்களை இச்சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
- வழமைபோல் காலை 6-00 மணிக்கு தினசரி எமது சேவை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் நடைபெறுகின்றது.


# சபையில்ஒலித்தது!

நமது சபை நிருபர்

பிரதமர்: ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மக்கள் தீர்ப்புக்கு முன் வரவுசெலவுத் திட்டத்தை ஏன் சமர்ப்பிக்கவில்லை? அரசு தோல்வியடைந்து விடும் என்ற பயம்தானே என்று கேட்டார் உலவான எம். பி. நீங்கள் அந்ததேர்தல்களின்போது என்னகூறினீர்கள். அரசு ரூபா மதிப்பைக் குறைக்கப்போகிறது. வாழ்க்கைச்செலவு அதிகரித்துக்கொண்டு வருகிறது. பொருட்களின் விலைகளை அதிகரிக்கப்போகிறது. என்றெல்லாம் நீங்கள் பிரசாரம் செய்தீர்கள்தானே. பத்திரிகைகள் மூலம் வானொலிமூலம் ரூபவாகினி மூலம் பிரசாரம் செய்தீர்கள் தானே. என்ன நடந்தது உங்கள் பிரசாரங்களைக் கேட்டபின்னரும் மக்கள் எமக்குத்தானே வாக்களித்தார்கள்.

பிரதமர்: மக்களை முட்டாள்கள் என எண்ணுதீர்கள் மக்களை அவமானப்படுத்தாதீர்கள் ரூபா மதிப்பைவிட இது மோசமான செயல்.

அமிர்: நான் சற்று பொறுமை இழந்துபேசிவிட்டேன். எமது நிலை அப்படி. (சிரிப்பு)

அமிர்: நீங்கள் சிரிக்கிறீர்கள் உங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம் எமக்கு வாழ்வா சாவா என்ற பிரச்னை!

ரொனி: தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப்போராடுவதாக எதிர்க்கட்சித்தலைவர் கூறுகின்றார் அவர்களது போராட்டம் எமது 'பட்ஜட்' டுக்கு அப்பாற்பட்டது.

ரொனி: நான் சர்வதேச நாணயசபைமீதும் உலகவங்கி மீதும் காதல்கொள்ளவில்லை. அவர்களோடு வெகு சிரமத்திற்கு மத்தியில் பேச்சுநடாத்தி ஒப்பந்தங்கள் செய்துகொண்டே கடன் பெறுகிறோம். நாட்டை அபிவிருத்தி செய்யவே கடன்பெறுகிறோம்.

ரொனி: சர்வதேச நாணயசபையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கடன்பெற்றமையினாலேயே மன்னார் - வவுனியா மாவட்டங்களில் கிராமிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள முடிகிறது. விரைவில் அத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. இதற்குமுன் அப்படியான திட்டம் ஏதாவது உங்களுக்குக் (கூட்டணியினருக்கு) கிடைத்ததா?

ரொனி: சர்வதேச நாணய சபையுடன் ஒப்பந்தம் செய்தமையினாலேயே பொதுமக்களுக்காக ஒரு லட்சம் வீடுகளை எமது பிரதமரால் கட்டமுடிந்தது.

ரொனி: 1980-ம் ஆண்டில் சர்வதேசநாணய சபையிடமிருந்து ஒரு சதம்கூட உதவி கிடைக்கவில்லை. அவர்கள் விதித்த நிபந்தனைகளை நாம் ஏற்கமறுத்தமையினாலேயே எமக்கு அந்த ஆண்டுகடன் கிடைக்கவில்லை. 81ல் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னரே கடன்கிடைத்தது.

பிரதிவெளிநாட்டு அமைச்சர்: தமிழ் ஈழ நிழல் அமைச்சரவையின் வெளிநாட்டமைச்சர் (திரு. தர்மலிங்கம்) இங்கு நல்லதொரு உரையை நிகழ்த்தினார் உங்களுக்கு ஒன்றுகூற விரும்புகின்றேன். உங்கள் தமிழ் ஈழக்கோரிக்கையும் நிழலாக சபையாகவே முடியும்.

பிரதி வெளிநாட்டு அமைச்சர்: சுதந்திரக்கட்சியினரைப் போல் உலக நாடுகளுடன் தொடர்பின்றி கிணற்றுத்தவளைகள் போல் நாம் இருக்கமாட்டோம்.

பிரதிவெளிநாட்டு அமைச்சர்: கூட்டணியும் சுதந்திரக் கட்சியும் இன்னமும் பாதாளக்கிணறுகளிலேயே இருந்து கொண்டு கூக்குரலிடுகின்றன.

# சடலம் அடையாளம் காணப்பட்டது!

[கிளிநொச்சி]

திருக்கேதீஸ்வரம் கடைவீதியில் மரணமான அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவரின் சடலம் கொழும்பு வெலிக்கம ஸ்ரோர் உரிமையாளரின் சகோதரரது சடலமென விசாரணையில் தெரியவந்துள்ளது.

மரணமானவர்சென்றவெள்ளிக்கிழமை கிளிநொச்சி சாறி எம்போறியம் வர்த்தக நிலையத்திற்கு வந்து 2 யார் பப்பிளின் துணி வாங்கிச் சாரம் தைத்துத் தான் அணிந்துவந்த உடுப்பை மாற்றிப் புதிய ஆடையை அணிந்தார் எனவும் அப்போதுதான் கொழும்பு வெலிக்கம ஸ்டோர் உரிமையாளரின் சகோதரர் எனச் சொன்னார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. பிரஸ்தாப நபர் அப்போது மது போதையில் இருந்தாராம்.

திருக்கேதீஸ்வரம் கடைவீதிக்கருகில் இவரது சடலத்திற்கு அருகில் கிளிநொச்சி சாறிஎம்போறியம் சொப்பிங் பையும், துணி வாங்கிய பற்றுச்சீட்டும் இருந்தது தெரிந்ததே. (க)

# மேக நோயை ஒழிக்க வட்டு.லயன்ஸ் நடவடிக்கை

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் சுழிபுரம் காட்டும்புலம் பகுதியில் பரவிவரும் மேக நோயை ஒழிக்கும் நோக்குடன் பல வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுக்குந் திட்டங்களை நிறைவு செய்ய உள்ளனர். முதலில் வெளிநாடொன்றின் அன்பளிப்பான 50 ஆயிரம் ரூபாவில் ஒரு கட்டிடத்தைக் கட்டி முடிக்கவுள்ளனர். இக்கட்டிடம் கட்டுவதற்கான காணி நாலு பரப்பை நன்கொடையாகப் பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த இ.போ.ச. பேரிமன் திரு. கி. வைரமுத்து வழங்கியுள்ளார். (அ)

## கல்விப் பொருட்காட்சி

(மன்னார்)

முசலிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான பொருட்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெறுகிறது

மாந்தைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான பொருட்காட்சி நாளையும் மறுநினமும் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்பொருட்காட்சிகளை மன்னார் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் திறந்துவைப்பார். (அ)

நீகல் தினசரி 5 காட்சிகள்
யாழ். நகர்
Richard Thomas in
BATTLE BEYOND THE STARS
25-3-83 முதல்
சட்டம் ஒரு இருட்டறை
[கலர்]

வெலிங்டன்? (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-3)
இன்று மட்டும்
சரத்பாபு-சுஹாசினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி - சாவித்திரி
ஜெமினி - சுப்பையா
கப்பலோட்டிய தமிழன்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
Roger Moore in
VENDATTA FOR THE SAINT
(Action Film)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன்
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

SANTHI (Jaffna) Today Only
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ROBERT DE NIRO...
The Deer Hunter [Action-Color)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனி — செளகார்ஜானகி
துணைவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன் மற்றும் பலர் நடித்த
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
"சரிதா" இப்படத்தில் நடித்ததன்மூலம் சிறந்த நடிகைக்கான ஜனாதிபதி விருதுபெற்றமை குறிப்பிடத் தக்கது.

## மாதுறுஓயாத் திட்டம்: மட்டக்களப்பு மக்களே அதிகம் பயனடைவர் - பிரதமர்

(கொழும்பு)

சிங்கள பகுதியில் மேற்கொள்ளப்படும் மாதுறுஓயா திட்டத்திற்கு பெரும்தொகை பணம் செலவிடப்படுகிறது. அந்த திட்டத்தினால் அதிக பயனை பெறுபவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மக்களே.

பிரதமர் ஆர். பிரேமதாசா 'பட்ஜட்' விவாதத்தின்போது பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறிதாவது:

தேர்தல் மாவட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்வதில் மட்டக்களப்பு யாழ்ப்பாண மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டதாக வட்டுக்கோட்டை எம். பி. இங்கு கூறியபோது நான் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன்.

சிக்கலான இவ்விஷயத்தை அவர் மிகவும் இலகுவாகக் கூறினார். அவ்வாறு சிக்கலான விஷயத்தை இலகுவாகக் கூறுவதில் அவர் திறமைசாலிதான். ஆனால் அவர் கூறிய விடயத்தில் உண்மை நிலை அப்படி அல்ல.

ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்களை மாவட்ட ஜனத்தொகை அடிப்படையில் அவர் கணக்கிட்டுக் கூறினார். அந்த அடிப்படையில் பார்த்தால் யாழ்., மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு மட்டுமல்ல களுத்துறை காலி ஆகிய மாவட்டங்களுக்கும் குறைந்த தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது.

மூலதன செலவினங்கள் பிராந்திய, மாவட்ட அடிப்படையில் ஒதுக்கப்படுவதில்லை. இந்த செலவின ஒதுக்கீடுகள் திட்டங்களைப் பொறுத்ததே.

உதாரணமாக மாவலி நீர் யாழ்ப்பாணம் செல்ல மாட்டாது ஆனால் மாவலித் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் யாழ்ப்பாணம், களுத்துறை, காலி போன்ற சகல இடங்களுக்கும் செல்லும்.

மூலதன செலவினம் எந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது எனக் கருத்தில் கொள்ளாதீர்கள். காங்கேசன்துறையில் உற்பத்திசெய்யும் சீமெந்து காங்கேசன்துறை மக்களுக்கா கிடைக்கிறது?

அமிர்: அப்பகுதி மக்களுக்குத் தூசிதான் கிடைக்கிறது.

பிரதமர்: உலகெங்கும் தொழிற்சாலைகள் உள்ள இடங்களிலெல்லாம் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்களினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் அத்தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள் பல பகுதி மக்களுக்கும் கிடைக்கிறது.

திரு. நீலன் திருச்செல்வம் எமது கட்சியில் இருந்தால் பயனுள்ள எம். பி யாக இருந்திருப்பார். தமது கட்சி அரசியல் அடிப்படையிலேயே தமது வாதத்தை நிகழ்த்தவேண்டிய நிலை அவருக்கு.

தமிழ் மக்கள் என்றால் யாழ்ப்பாண மக்கள்தான் தமிழ் மக்கள் கொழும்பில் வாழும் மக்களில் 30 வீத மானோர் தமிழர்கள் என 80ம் ஆண்டு புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது. (இ)

## உதைபந்தாட்ட ஒரு நாள் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

7 பேர் கொண்ட ஒருநாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை வயாவிளான் மின்மினி மன்றம் நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்படவிருக்கும் இச்சுற்றுப் போட்டியில் 1-ம், 2-ம் இடம் பெறும் கழகங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டிகள் யாவும் நொக்கவுட் முறையிலேயே நடைபெறுமென்றும் மேற்படி கழகச் செயலாளர் திரு. சு. சிவதாசன் தெரிவித்தார்.

அடுத்த மாத முற்பகுதியில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

## தலைவராக தெரிவு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10வது வருடாந்தப் பொதுக்கூட்டம் சித்தன்கேணி கணேசவித்தியாசாலையில் நடைபெற்றபோது சங்கத் தலைவராக யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. சு. நடேசு மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இச் சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்துவரும் திரு. நடேசு யாழ் மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவராகவும் கடமையாற்றிவருகின்றார். (க)

## சங்கானை - வடக்கு கிராமோதய சபைத் தலைவர்

(பண்டத்தரிப்பு)

சங்கானை வடக்கு கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் விசேடசேவை அலுவலர் திரு எம். ஏ. அல்பிரட் தலைமையில் நடைபெற்றபோது திரு. இ. செல்வரத்தினம் மீண்டும் தலைவராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகக் கடமையாற்றும் திரு. செல்வரத்தினம் பண்டத்தரிப்பு பட்டின சபையின் முன்னாள் தலைவருமாவார்.

## போட்டியின்றி தெரிவு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு. சி. பொ. யோகராசா தலைமையில் நடைபெற்றபோது சட்டத்தரணி திரு.சி.இராசேந்திரன் மீண்டும் தலைவராக போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார். (க)

## கந்தர்மடம் பாடசாலையை எம். பி. பார்வையிடுவார்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு நல்லூர்த் தொகுதி எம். பி. திரு மு. சிவசிதம்பரம் விஜயம் செய்து பாடசாலையின் குறைகளை அறியவுள்ளார். இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே திரு. சிவசிதம்பரம் இங்கு செல்லவுள்ளார்.

இம்மாதம் 26-ந் திகதி இப்பாடசாலைக்கு வரும் எம் பி. அபிவிருத்திசபைப் பிரமுகர்களுடனும், மாணவர்கள், பெற்றோர்களுடனும் பேசிக் குறைபாடுகளை அறிந்துகொள்வார். எம். பி யுடன் யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உபதலைவர் சட்டத்தரணி சி. நாகராசாவும் செல்லவுள்ளார். (அ)

## புதுவருட விளையாட்டுப் போட்டி

(நயினாதீவு)

நயினாதீவு விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் வருடாவருடம் புதுவருட தினத்தையொட்டி நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டி இவ்வருடம் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை விளையாட்டுக்கழகச் செயலாளர் திரு. நா. க. குமாரசூரியர் மேற்கொண்டு வருகின்றார்.

## மீண்டும் தலைவராகத் தெரிவு

(சுழிபுரம்)

சங்கானை மேற்கு கிராம சேவையாளர் பிரிவு கிராமோதய சபைத் தலைவராக வைத்தியகலாநிதி செ. வைத்திலிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் சங்கானையிலுள்ள யாழ். மாவட்ட உப அலுவலக ஆயுள்வேத வைத்தியசாலையில் பிரதம வைத்தியராகப் பணியாற்றி வருகின்றார்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு (22—3—83)

மேடம்: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படுகிறது, கடந்த சில நாட்களாக நிலவி வந்த தயக்கநிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும், பிறந்த இடத்தில் இருந்து அழைப்புக்கிடைக்கும்.

இடபம்: நிதியில் முடக்கம் ஏற்படும், சிலர் வீண்பழிக்கும் இலக்காவார்கள், விவசாயிகளின் தொல்லைகள் அதிகரிக்கும், பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம், நாணயக்கம் நன்று.

மிதுனம்; துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு, எவ்விடயத்திலும் ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும், ஆணவப் போக்கு மற்றவர்களை அடி சறுக்க வைக்கும்.

கடகம்: இதயப் படுதாவில் இன்பக்கூத்து, வாழ்க்கையில் சிலகாரியங்கள் நிறைந்ததாக இருக்கும், கற்றகல்வியின் பயன் இன்று கைமேல் கிடைக்கும், நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

சிங்கம்: பணம் பறிபோகத்தக்க இடமேற்படும். முகமன் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும், அதிக சிந்தனைக்கிடமளியாது பிரயாணத்தைப் பின்போடவும்.

கன்னி: சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம், மாதருடன் சுமூகம் உண்டாகும், இதைத்தொடர்ந்து தொடும் சம்பவங்கள் இடம்பெறும்.

துலாம்: எப்பக்கம் திரும்பினாலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள், பொதுமக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படலாம், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: வாய்வுக்கோளாறினால் வேதனைப்படுவீர்கள், உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும், எதிரிகளின் கோழைத்தனமான நடவடிக்கை உங்கள் அமைதியைக் குலைக்கும்.

தனுசு: வெற்றி உமது அருகில் விரைந்து வரும், எதிர்த்தவர்களே ஆதரவுதருவதற்கு முன்வருவார்கள், களஸ்திர வழியாலும் நன்மைகள்சேரும் காதலர்களுக்கு இனிப்பான தினம்.

மகரம்: கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாமல் வேதனைப்படுவீர்கள், மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கு இலக்காகாமல் மௌனமாய் இருக்கவும்.

கும்பம்: பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்திற்கும் நாள் நிச்சயப்படலாம், தந்தைவழி மூலம் ஆதரவும் பெருகும்.

மீனம்; வாழ்க்கையில் வசதிகள் பெருகும், கற்றதனால் பயன் இன்று கண்டிப்பாகக் கிடைக்கும், செய்தொழிலில் புதிய சாதனையை உருவாக்குவீர்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## சுவீடன் பயணம்

[பண்டத்தரிப்பு]

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியின் முகாமையாளர் செல்வி மகாலட்சுமி சுப்பையா சுவீடன் நாட்டில் அடுத்தமாதம் ஆரம்பமாகும். கூட்டுறவு பயிற்சிநெறிக்கான புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளார். மூன்று மாதகாலம் இவர் சுவீடனில் தங்கியிருந்து மேற்படி பயிற்சியைப் பெறுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. [க]

## மயிலிட்டி கொலை வழக்கு:

# இறந்தவர் வீட்டிற்கு அருகில் 1ம், 2ம் எதிரிகளைக் கண்டேன்

## கந்தையா சாட்சியம்

(மாவிட்டபுரம்)

'விதானையார் வீட்டுப் பக்கம் வெடிச்சத்தம் கேட்கவே அங்கு நான் ஓடினேன். அங்கு 50 பேர்வரை நின்றனர். விதானையார் மல்லாந்து இறந்து கிடந்தார். அவரின் நெஞ்சில் இரத்தக்காயம் இருந்தது. விதானையாரின் மகன் அழுது கொண்டு நின்றார்'

இவ்வாறு மயிலிட்டி முன்னாள் விதானையார் சின்னப்பு கதிரேசு கொலை வழக்கில் சாட்சியமளித்த மயிலிட்டியைச் சேர்ந்த சிவசம்பு கந்தையா கூறினார்.

மயிலிட்டி முன்னாள் விதானையார் சின்னப்பு கதிரேசுவை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக மயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகநாதன், இரத்தினபுரி மில்லவெட்டிய தோட்டத்தைச் சேர்ந்த பிச்சைமுத்து சுகுமார் ஆகியோர் மீது குற்றஞ் சுமத்தி இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்ட சமயம் சிவசம்பு கந்தையா மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

'இறந்த விதானையாரை 10 வருடகாலமாக எனக்கு தெரியும். அவருடைய வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவில் நான் வசிக்கிறேன். 1-ம் எதிரியையும் எனக்கு தெரியும். 2-ம் எதிரியையும் 5 வருடகாலமாக தெரியும். இறந்தவர் வீட்டில் 5, 6 வருடங்களாக அவர் வேலையாளாக இருந்து வந்தார்.

'சம்பவதினம் பிற்பகல் நான் இளவாலைக்கு சென்றிருந்தேன். இளவாலையிலுள்ள எனது அக்காவிடம் கடன் வாங்கிய 100 ரூபா பணத்தை கொடுப்பதற்காக அங்கு சென்றிருந்தேன். இரவு 11 மணியளவில் திரும்பி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். இறந்தவரின் வீட்டை கடந்து தான் எனது வீட்டுக்கு செல்வது வழக்கம். இறந்தவரின் வீட்டுக்கண்மையில் நான் போய்க்கொண்டிருந்த சமயம் 1-ம் எதிரியையும், 2-ம் எதிரியையும் கண்டேன். 1-ம் எதிரி சாரமும் சேட்டும் அணிந்திருந்தார். தலையில் தொப்பியும் போட்டிருந்தார், வலது கையில் டோர்ச்லைட்டும் இடது கையில் துப்பாக்கியும் வைத்திருந்தார். 2-ம் எதிரி கறுப்பு மேலங்கியும், கட்டைக் களிசானும் அணிந்திருந்தார். அவரது கையில் எதுவுமிருக்கவில்லை.

'இவர்களைக் கண்ட பின் நான் எனது வீட்டுக்குப் போய் விட்டேன். 12 மணியளவில் விதானையார் வீட்டுப் பக்கம் வெடிச்சத்தம் கேட்டது. அத்துடன் குளறியும் சத்தம் கேட்டது. நான் அங்கு ஓடிப்போனேன். அங்கு விதானையார் நெஞ்சில் இரத்தக் காயத்துடன் இறந்து கிடந்தார். அங்கு நின்றவர்களிடம் எதிரிகளைக் கண்டது பற்றி நான் கூறினேன்.' என்றார்.

குறுக்கு விசாரணையின் போது சாட்சி கூறியதாவது: 'வெடிச்சத்தம் கேட்பதற்கு முன்னரே நான் எதிரிகளை கண்டேன். அம்பலம் கந்தையா என்பவரும் எதிரிகளை தாம் கண்டதாக என்னிடம் கூறினார்' என்றார்.

''1-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ததையடுத்து நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே. உலகநாதன் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும், 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்லத்துரையும் ஆஜராகினர்'

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சட்டத்தரணி திருமதி கமலா சொர்ணலிங்கத்துடன் ஆஜரானார். (க)

## இப்படியும் நடக்கிறது

அரசினர் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குள்ளான 52 வயதுடைய ஒருவர் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு எட்டு மாதங்களின் பின்னர் மரணமானார்.

அவரது பூதவுடல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சாம்பல் அள்ளச் சென்ற உறவினர்கள் அந்தச் சாம்பலுக்குள், சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் ஒரு உபகரணத்தையும் கண்டு எடுத்தனர்!

சத்திரசிகிச்சை செய்தபின்னர் இறந்தவர் தமது வயிற்றில் நோவதாக அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாரே... என்பது இப்பொழுது பலருக்கு சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது!

— 'ஊடுருவி'

### விஸ்வமடு

## கி. அ. சபை கட்டிமுடித்த பாடசாலைக் கட்டிடம்!

### உதவி அரசாங்க அதிபர் பாராட்டு

(விஸ்வமடு)

''இலங்கையிலேயே முதன் முதல் ஒரு பாடசாலைக்கான கட்டிடத்தை அமைத்துக் கொடுத்த பெருமை விஸ்வமடு கிராம அபிவிருத்தி சங்கத்திற்குக் கிடைத்துள்ளது 120 அடி நீளமுள்ள இக்கட்டிடம் அழகும் உறுதியும் உள்ளதோடு இப்பகுதி மக்களின் அறிவுத்திறனுக்கும் ஆக்கத்திறனுக்கும் ஒரு மைல்கல் போல அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

விசுவமடு அ. த. பாடசாலையின் புதிய கட்டிடம் முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. க. நல்லையாவிடம் கையளிக்கப்பட்டது. வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய முல்லைத்தீவு உதவியரசாங்க அதிபரும் புதுக்குடியிருப்பு பதில் உதவி அரசாங்க அதிபருமானதிரு. வி. சிங்காரவேலு மேற்கண்டவாறு கூறினார்.

விஸ்வமடுகிராமஅபிவிருத்தி தலைவர் திரு. க. தர்மசூரியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டக் கையளிப்பு வைபவத்தில் முல்லைத்தீவு மாவட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. வி. க. நல்லையா, உடையார்கட்டு கிராமோதயசபைத்தலைவர் திரு. த. விநாயகமூர்த்தி, விஸ்வமடு குடும்ப நலத்திட்டச் சங்கத் தலைவர் திரு. சு. நடராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி. வரதராஜா, கிராம சேவையாளர் திரு. மு. தனபாலன், வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். நாகராசா, 'பாடசாலை அதிபர் திரு. ச. விசுவநாதர், கல்வித்திணைக்கள தொழில்நுட்ப அதிகாரி திரு. எஸ். பாலச்சந்திரன். இளைஞர் கழகத்தலைவர் திரு. ஆ. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

## வவனியாவில் இன்று பாரதி நூற்றாண்டு விழா

[வவனியா]

தமிழ்நாடு பேராசிரியர் இராமகிருஷ்ணன் இன்று வவனியா வருகிறார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க அனுசரணையுடன் வவனியா பாரதி நூற்றாண்டு விழா பேரவை நடத்தும் பாரதி தின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவே பேராசிரியர் இராமகிருஷ்ணன் தமது துணைவியாருடன் வருகின்றார். வவனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும் இலக்கிய உரை, எழுத்தாளர் இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்பு ஆகியவற்றிலும் பேராசிரியர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்.

இன்று மாலை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமையில் நகரமண்டபத்தில் இடம்பெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பேராசிரியர் இராமகிருஷ்ணன், திருமதி இராமகிருஷ்ணன், நாவலாசிரியை இராஜம் கிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

பிரதம அதிதிகளாக வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவனியா நகரபிதா திரு. ஐ. கேதீஸ்வரன், வவனியாமாவட்டஅபிவிருத்தி சபைத் தலைவர் திரு. மு. சிற்றம்பலம், முல்லைமணி திரு. வெ. சுப்பிரமணியம், விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வவனியா பாரதிநூற்றாண்டு விழாப் பேரவை செயலாளர் திரு. மு. பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

விழாப்பேரவை பொருளாளர் திரு. என். ஜி. நாதன் நன்றியுரை கூறுவார். [க]

### விபத்தில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிவானந்தம் [வயது30) என்பவரே மரணமானவராகும்.

லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதப்பட்டு சுமார் 60 யார் தூரம் இழுத்துச்செல்லப்பட்டு மின் கம்பத்துடன் மோதப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினார்.

இச் சம்பவம் தொடர்பாக நாவாந்துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா என்பவரும் லொறிச் சொந்தக்காரர் பொன்னுத்துரை தர்மராஜா என்பவரும் தாங்கள்தான் லொறிச்சாரதியாக கடமையாற்றியதாகக் கூறி சரணடைந்ததைத் தொடர்ந்து இருவரையும் இம்மாதம் 25ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு மேற்கொண்டு விசாரணைகளை நடத்துமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

### மற்றுமொரு விபத்து

தச்சன் தோப்பைச் சேர்ந்த திரு. ஞானம் [25 வயது] என்பவர் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது ரயிலுடன்மோதிமரணமானார் இச்சம்பவம் நாவற்குழி ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் கடவையில் நிகழ்ந்தது.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பரராசசிங்கம்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், மாங்குளம் தனலட்சுமி ஸ்டோர்ஸ் உரிமையாளருமான திரு. சி. பரராசசிங்கம் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காட்டு மயானத்திற்கு (இன்று) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

[6615]

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி வேலுப்பிள்ளை

வடலியடைப்பு, சங்கானை மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) 15ம் திகதி காலமானார். இவர் துரைராஜா (Jaffergi Brothers), அதிபர் Capt. M. U. Satellite) ஆகியோரின் தாயாரும், பூரணபாக்கியவதியம்மா, ஏகசிதம்பரேஸ்வரி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், ரஞ்சன், ரஜனி, ராஜன், சபேசன், பிரசாந்தன், நிவசாந்தன், பிருந்தரூபி ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 22ம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை வடலியடைப்பில் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி E. அதிபர், ''மகேஸ்வரி விலா,'' சண்டிலிப்பாய்.

(6606)

## பனையால் விழுந்து மரணம்

(புலோலி)

கள்ளுச் சீவும்போது பனை மரத்திலிருந்துதவறி விழுந்து ஆறு பிள்ளைகளின் தந்தை பரிதாப மரணத்திற்குள்ளானார்.

சரசாலை மத்தியைச் சேர்ந்த சி. மாணிக்கம் (வயது 50] என்னும் சீவல்தொழிலாளியே பனையால் விழுந்து மரணமானவராவார்.

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க மட்டுவில் வடக்குக் கிளையில் சீவல் தொழிலாளியான இவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார். (க]

## நல்லைக்குருமணி: இன்று குருபூசை

[யாழ்ப்பாணம்]

நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் இரண்டாவது ஆண்டு குருபூஜை, இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

ஆதீனத்தில் இன்று காலை 6 மணிக்கு விசேட பூஜை நடைபெற்றது. 11-30 மணிக்கு அபிஷேகமும், திருவடி பூசையும், 12 மணிக்கு மாகேசுர பூசையும் இடம்பெறும். மாலை 5 மணிக்கு விசேடபூசையும் அதனைத் தொடர்ந்து 5-45க்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும்.

### பத்திரிகையாளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பாராளுமன்றத்தில் ராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் சம்பள நிர்ணயசபை அமைக்கப்படுவது சம்பந்தமான நடவடிக்கைகளை தொழில் அமைச்சு மேற்கொண்டுவருகிறது என்றும் கூறினார்.

### பொலிஸ் சீருடை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் என்பவருக்கு தம்மை யொரு பொலிஸ் கான்ஸ்டபிள் என்று அறிமுகம்செய்து தான் கள்ளநோட்டுக்கள் பற்றி விசாரணை செய்வதாகக் கூறி அங்கிருந்து 100 ரூபா 50 ரூபா நோட்டுக்கள் கொண்ட 797 ரூபா ரொக்கத்தை எடுத்துச் சென்றாராம்.

நோட்டுக்களை எடுத்துச் சென்ற இந்நபர், அங்கிருந்த விகிதரிடம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக கிளிநொச்சிப்பொலிஸ்நிலையத்திற்கு வருமாறும். அங்கு வவனியா பொலிஸ்அதிபரும் விசாரணைசெய்யவருவார் என்றும் கூறிச்சென்றாராம்.

மறுநாள் விகிதர்கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குச்சென்றபோது அங்கு மேற்படி நபரினால் விகிதர் ஏமாற்றப்பட்ட விஷயம் தெரியவந்தது!

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.